தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

புரட்டாசி 11, பிரஜோற்பத்தி-திருவள்ளுவர் ஆண்டு, 2022
1991, செப்டம்பர் 27, வெள்ளிக்கிழமை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. இரா. முத்தையா அவர்கள் தலைமையில் காலை 9.30 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

''கொடையளி செங்கோல் குடியோம்பல் நான்கும்
உடையானாம் வேந்தர்க் கொளி.''

கொடை, அருள், செங்கோல்முறை, தளர்ந்த குடிகளைக் காத்தல் ஆகிய நான்கும் உடைய அரசன், அரசர்க்கெல்லாம் விளக்குப் போன்றவன்.

1. வினாக்கள்—விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள். வினா எண் 88. திரு. ச. புரட்சிமணி, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள், 88, 89 ஆகிய இரு வினாக்களும் ஒரே பொருள் பற்றியது. ஆகவே வினா எண்.89, செல்வி பி. நிர்மலா, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள். இரண்டு வினாக்களும் சேர்த்து எடுத்துக் கொள்ளப்படுகின்றன.

பெண்ணாடம் நகரில் பெண்கள் மேல்நிலைப்பள்ளி.

88—

* 1288—திரு ச. புரட்சிமணி :
மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தென்னாற்காடு மாவட்டம், மங்களூர் தொகுதியில் பெண்ணாடம் நகரில் பெண்கள் மேல்நிலைப்பள்ளி அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. இராம வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தற்போது இல்லை.